பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
16 01 2025 **THURSDAY** 6 30 **PM**

<u>வணக்கம் - மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய அரசு ஊழியர்களுக்கான 8வது ஊதியக் குழுவை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

2. நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் வரி கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

3. முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்பை கண்காணிக்க, ஏழு உறுப்பினர்கள் கொண்ட புதிய கண்காணிப்புக் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது

4. காணும் பொங்கலை ஒட்டி, சென்னை மெரினா கடற்கரை, நாகை மாவட்டம், வேளாங்கண்ணி உள்ளிட்ட சுற்றுலா தலங்களில் மக்கள் அதிக அளவில் குவிந்துள்ளனர்.

5. இந்திய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ், பி.வி. சிந்து ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<>>>>>>>>

மத்திய அரசு ஊழியர்களுக்கான 8வது ஊதியக் குழுவை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், ஊதியக்குழுவின் தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என்று கூறினார்.

7வது ஊதியக்குழுவின் காலவரம்பு 2026ஆம் ஆண்டு இறுதியுடன் முடிவடையவுள்ள நிலையில், எட்டாவது ஊதியக்குழு அதன் பரிந்துரைகளை அளிக்க போதுமான அவகாசம் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>>>

ஸ்ரீஹரிகோட்டாவில் 3 ஆயிரத்து 984 கோடியே 86 லட்சம் ரூபாய் செலவில், மூன்றாவது ராக்கெட் ஏவுதளம் அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஏவுதள கட்டுமானப் பணிகள் நான்காண்டுகளுக்குள் நிறைவடையும் என்று தெரிவித்தார்.

<<<<<>>>>>>>>

ஸ்ரீஹரிகோட்டா, சத்திஷ்தவன் விண்வெளி மையத்தில் மூன்றாவது ஏவுதளம் அமைப்பது என்ற மத்திய அமைச்சரவையின் முடிவு பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு தலைமைக்கு சான்றாக விளங்குவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், விண்வெளித் துறையில் வளர்ச்சிக்கான பல மாற்றங்கள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக தெரிவித்துள்ளார்.

புதிய முயற்சிகளையும், தரமான கண்டுபிடிப்புகளையும் கொண்டு வருவதற்கான பல முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சத்திஷ்தவன் மையத்தில் மூன்றாவது ஏவுதளம் அமைப்பது விண்வெளித் துறையில் சுயசார்பு பயணத்தின் மைல்கல்லாக விளங்குகிறது என்றும் திரு. எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>>>

வரி சீர்திருத்தம் உள்ளிட்ட 2024-25 பட்ஜெட் அறிவிப்புகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

நடப்பு நிதியாண்டு நிறைவடையவுள்ள நிலையில், அரசின் சாதனைகளை பட்டியலிட்டுள்ள நிதியமைச்சகம், வரி செலுத்தும் நடைமுறைகளை மத்திய நேரடி வரிகள் வாரியம் எளிமைப்படுத்தியதுடன், பினாமி சொத்து விவரங்களை நேரடியாக தெரிவிக்க முன்வருவோருக்கு தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளது.

வருமான வரி பிடித்தத்திற்கான நிரந்தர கழிவுத் தொகையை அதிகரித்தது, புதிய வரி விதிப்பு முறை போன்றவை வரி செலுத்துவோருக்கு நிம்மதியை ஏற்படுத்தியிருப்பதாகவும் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

கறுப்புப்பண சட்டத்தின் கீழ், 20 லட்சம் ரூபாய் வரையிலான அசையும் சொத்துக்களை தெரிவிக்காமல் இருப்பதை தண்டனைக்குரிய குற்றப் பட்டியலிலிருந்து நீக்கியதுடன், வரி செலுத்துவோருக்கு பல்வேறு சமூக பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதாகவும் நிதியமைச்சம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஆதரவளிக்கும் விதமாக, வரி கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது என்றும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

முதலீடுகளை ஊக்குவித்து, வேலைவாய்ப்புகளை அதிகரிக்க புத்தொழில் நிறுவனங்கள், கப்பல் கட்டும் நிறுவனங்கள், வைரம் பட்டை தீட்டும் தொழில்துறைக்கு ஆதரவாகவும் பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டிருப்பதை நிதியமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

<<<<<>>>>>>>>

எம்.பி.பி.எஸ், பிடிஎஸ் உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு இவ்வாண்டும் **OMR** பேப்பர் பதிவு முறையிலேயே மேற்கொள்ளப்படும் என்று தேசிய தேர்வுகள் முகமை அறிவித்துள்ளது.

இந்த முகமை இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தேசிய மருத்துவக் குழுமம் இவ்வாண்டும் வழக்கமாக உள்ள நடைமுறையின் படியே இளநிலை நீட் தேர்வுகளை நடத்துவது என முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வுகள் அனைத்தும் நாடு முழுவதும் உள்ள தேர்வு மையங்களில், ஒரே நாளில் ஒரே நேரத்தில் நடைபெறும் என்றும் அதில் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>>

முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்பை கண்காணிக்க, ஏழு உறுப்பினர்கள் கொண்ட புதிய கண்காணிப்புக் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி அணை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்த குழுவின் தலைவராக தேசிய அணை பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் செயல்படுவார்.

தமிழக அரசின் சார்பில் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், காவிரி தொழில்நுட்பக் குழுவின் தலைவர் ஆகியோரும் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இதேபோன்று, கேரள அரசின் நீர்வளத்துறை அதிகாரிகள், பெங்களூரு இந்திய அறிவியல் கழக உயர் சிறப்பு மையத்தின் பிரதிநிதி உள்ளிட்டோரும் புதிய குழுவில் இடம்பெற்றுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>>>>

மூன்றாவது சென்னை பன்னாட்டு புத்தக திருவிழா, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த புத்தக திருவிழாவை, மாநில அமைச்சர்கள் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு. தா.மோ. அன்பரசன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இதில் அமெரிக்கா, மலேசியா, பிரான்ஸ் உள்ளிட்ட 64 நாடுகளைச் சேர்ந்த பதிப்பாளர்கள் தங்களது அரங்குகளை அமைத்துள்ளனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, 66 தமிழ்ப் புத்தகங்கள் 32 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தமிழிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்ட 30 நூல்களை, நாளை மறுநாள் நடைபெறும் நிறைவு விழாவில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிடவிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>>>>

தமிழகத்தில் இன்று காணும் பொங்கலை ஒட்டி சென்னை மெரினா கடற்கரை உள்ளிட்ட சுற்றுலா தலங்களில் மக்கள் அதிக அளவில் குவிந்துள்ளனர்.

நாகை மாவட்டம், வேளாங்கண்ணி, வேதாரண்யம், கோடியக்கரை உள்ளிட்ட கடற்கரை பகுதிகளில் ஏராளமான மக்கள் தங்கள்

குடும்பத்தினருடன் காணும் பொங்கலை உற்சாகத்துடன் கொண்டாடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் 40 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>>>>

மாவட்டச் செய்திகள்

கரூர் மாவட்டம், குளித்தலை அருகேயுள்ள இராட்சாண்டர் திருமலையில் உள்ள விரையாச்சிலை ஈஸ்வரர் கோவிலில் ஜல்லிக்கட்டு விழாவை மாநில அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி இன்று தொடங்கி வைத்தார்.

<<<<<>>>>>>>>

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் காட்சிக்கு வைக்கப்பட்ட ஆதியோகி சிவன் சிலையை ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

<<<<<>>>>>>>>

வேலூர் மாவட்டம், மூஞ்சூர்பட்டு மற்றும் புலிமேடு கிராமங்களில் காணும் பொங்கலை முன்னிட்டு, காளை விடும் திருவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

<<<<<>>>>>>>>

திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரி மலையில் உள்ள நிலாவூரில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பொதுமக்கள் சேவாட்டம் கொண்டாடினர்.

<<<<<>>>>>>>>

நீலகிரி மாவட்டம், உதகை அருகேயுள்ள கொல்லிமலையில் கம்பட்டராயர் திருவிழா வெகுசிறப்பாக நடைபெற்றது.

<<<<<>>>>>>>>

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் காணும் பொங்கலை ஒட்டி, முருகப் பெருமான் ஆயிரத்து எட்டு தங்க வில்வ இலை சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

<<<<<>>>>>>>>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அருகே, பழனி பாதயாத்திரை சென்ற பக்தர்கள் மீது கார் மோதியதில், மதுரையைச் சேர்ந்த இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்தனர்.

<<<<<>>>>>>>>

இந்திய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ், பி.வி. சிந்து ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் கிரண் ஜார்ஜ், 22-20, 21-13 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் **Alex Lanier-**ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் பி.வி. சிந்து, 21-15, 21-13 என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Manami Suizu-**வை வென்றார்.

<<<<<>>>>>>>>

ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - மெக்ஸிகோவின் **Reyes Varela** இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-3 என்ற செட்கணக்கில் நெதர்லாந்தின் **Robin Haase –** கஜகஸ்தானின் **Aleksandr** இணையை வென்றது.

<<<<<>>>>>>>>

தில்லியில் நடைபெற்று வரும், உலக கோப்பை **Kho Kho** போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இன்று பூட்டானையும், மகளிர் பிரிவில் மலேசியாவையும் எதிர்கொள்கிறது.

<<<<<>>>>>>>>

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனிஷ் சுரேஷ்குமார் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-----------

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் பஞ்சாப் அணி இன்று மும்பை அணியை எதிர்கொள்கிறது.

<<<<<>>>>>>>>

17 வயதுக்குட்பட்டோருக்கான தேசிய கூடைப்பந்து போட்டியை மாநில அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சென்னையை அடுத்த செம்மஞ்சேரியில் இன்று தொடங்கி வைத்தார்.

<<<<<END>>>>>>>